www.tamilarangam.net

அன்பளிப்பு ரு-1

# உறுமல்

நாள்: 01-07-1986 தமிழீழச் செய்திகள் வெளியீடு: 02

## மூன்று வாரத்துக்கு மேலாக நடந்து வரும்

# கிளிநொச்சி யுத்தத்தில் விடுதலைப் புலிகள் வெற்றிமுகம்

கடந்த 4ந் தேதி (4-6-86)யிலிருந்து மூன்று வாரத்துக்கு மேலாக நீடித்துவரும் சிங்கள இராணுவத்தினருடனான சண்டையில் விடுதலைப் புலிகள் பெரும் வெற்றி அடைந்திருக்கிறார்கள். கிளிநொச்சிப் பகுதியைத் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகக் கடும் முயற்சியில் இறங்கிய சிங்கள இராணுவத்தினரைத் தடுத்து நிறுத்திப் பின்வாங்க வைத்து, மீண்டும் பழைய படி முகாம்களுக்குள்ளேயே அவர்களை முடக்கி வைப்பதில் விடுதலைப் புலிகள் வெற்றி கண்டுள்ளார்கள்.



சசீந்திரன் (சசி)
4ம் நாள் யுத்தத்தில் வீரமரணமடைந்த விடுதலைப்புலி

இந்த வெற்றியின் மூலம், 'யாழ்ப்பாணத்துக்கு உள்ளே ஆனையிறவுக்கு வடக்கே தான் புலிகளின் செல்வாக்கு. தெற்கேசிங்கள இராணுவம்தான் ஆட்சிபுரிகிறது' என்று கோயபல்ஸ் பாணியில் திட்டமிட்டு ஒரு சிலரால் மேற்கொள்ளப்பட்ட பொய்ப் பிரச்சாரங்கள் பொய் என்பதை விடுதலைப் புலிகள் நிரூபித்துவிட்டார்கள்.

கிளிநொச்சி யுத்தம் தொடங்கிய நாளிலிருந்து இதுவரை 33 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஒரு கவச வாகனம் ஒரு கெலிகொப்டர் என்பனவும் விடுதலைப் புலிகளால் சேதமாக்கப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகள் தரப்பில் ஐவர் வீரமரணமடைந்துள்ளனர்.

---

தமிழீழ விடுதலைப் புலிகளின் செய்தி வெளியீட்டுப் பிரிவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## முதலாவது நாள்

4-6-86 அன்று அதிகாலை சிங்கள ஆயுதப்படைப் பிரிவு ஒன்று முகாமை விட்டு வெளியேறி தருமபுரம் நோக்கிப் புறப்பட்ட சிறிது நேரத்தில், இராணுவ முகாமுக்குச் செல்லும் மூன்று பாதைகளிலும் உள்ள பாலங்களை விடுதலைப் புலிகள் முதலில் குண்டு வைத்துத் தகர்த்தனர். அதனால் வெளியே வந்த இராணுவத்தினர் உள்ளே திரும்பிச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து தனிமைப்படுத்தப்பட்ட இராணுவ அணிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பலத்த மோதல் ஏற்பட்டது. அதே வேளை விடுதலைப் புலிகளின் இன்னொரு அணியினர் கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் மேலும் வெளியே வர முடியாதபடி சுற்றி வளைத்து முற்றுகையிட்டு தாக்குதலை மேற்கொண்டனர். வெளியே வந்த இராணுவத்தினரின் வாகனங்கள் சில விடுதலைப் புலிகளின் கண்ணிவெடிகளுக்கு இலக்காகி சிதறடிக்கப்பட்டன.

விடுதலைப் புலிகளின் தாக்குதலால் சின்னாபின்னமான சிங்கள இராணுவத்துக்கு உதவும் வண்ணம் வடக்கேயுள்ள ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் புறப்பட்ட இடத்திலேயே சந்தித்து பெரும் தாக்குதலை மேற்கொண்டு தடுத்து நிறுத்தினர். விடுதலைப் புலிகளை நேருக்கு நேர் களத்தில் சந்திக்க அஞ்சிய இராணுவத்தினர் முகாமுக்கு உள்ளேயே இருந்துகொண்டு கண்மூடித்தனமாக மேற்கொண்ட ஷெல் தாக்குதலினாலும் விமானக் குண்டு வீச்சினாலும் குழந்தைகள் உட்பட 6 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 3 குண்டு வீச்சு விமானங்களும் 2 கெலிகப்டர்களும், உருத்திரபுரம், குஞ்சுப்பரந்தன், கோணாவில் ஆகிய இடங்களில் இடைவிடாத தாக்குதலை மேற்கொண்டன.

## இரண்டாவது நாள்

5-6-86 அன்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்த சண்டையின்போது கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று முக்கிய கேந்திர இடங்களான இராணுவபோலீஸ் கூட்டமைப்பு அலுவலகம், இராணுவ முகாம், போலீஸ் நிலையம் என்பவற்றை விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்து முற்றுகையிட்டு தாக்குதல் மேற்கொண்டனர். விடுதலைப் புலிகள் நடத்திய ராக்கெட் தாக்குதலில் இராணுவ முகாமின் பாதுகாப்பு அரண்கள் முற்றாகச் சேதமாகின. முகாமுக்கு வெளியேவரமுடியாதசிங்கள இராணுவம் முகாமுக்குள்ளே இருந்து கொண்டே, பல மைல்களுக்கு அப்பால் சென்று தாக்கக்கூடிய ஆட்லரி ஷெல்கொண்டு தாக்கியதில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

கிளிநொச்சி இராணுவத்தினருக்கு உதவுமுகமாக இரண்டாவது நாளாக ஆனையிறவு முகாமிலிருந்து வெளியேவர முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் சிலிண்டர் தாக்குதலை மேற்கொண்டதைத் தொடர்ந்து இராணுவத்தினர் பலத்த சேதத்துடன் முகாமுக்குத் திரும்பினர். புலிகளின் முற்றுகைக்குள்ளாகிய இராணுவத்தினருக்குப் பாதுகாப்பாக பாரிய குண்டுவீச்சு விமானங்களும், இயந்திரத் துப்பாக்கி பொருத்தப்பட்ட கெலிகப்டர்களும் பொதுமக்கள் வாழும் இடங்களில் நடத்திய தாக்குதலில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஏராளமான வீடுகளும் சேதமுற்றன. ஆகாயத் தாக்குதலின் போது விடுதலைப்புலிகள் நடத்திய எதிர்த் தாக்குதலில் ஒரு கெலிகப்டர் சேதத்துக்குள்ளாகி உடனடியாகத் தரையிறக்கப்பட்டது. விமானத் தாக்குதலின்போது யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் (மாவட்ட ஆட்சித் தலைவரின்) மோட்டார் வாகனமும் கடும் சேதத்துக்குள்ளாகியது இதில் அவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

## மூன்றாவது நாள்

மூன்றாவது நாளாக (6-6-86 அன்று) நடந்த சண்டையில் டொலர்பாமிலிருந்து புறப்பட்டு நடைபவனியாக சிலோன் தியேட்டரை நோக்கி நடந்து வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நேரடியாக மேற்கொண்ட தாக்குதலில் பல இராணுவத்தினர் பலியாகியதுடன் மேலும் பலர் படுகாயமடைந்தனர். கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து நடைபவனியாகப் புறப்பட்ட இராணுவத்தினர் பஸ் டிப்போ சந்தியினூடாகக் கனகபுரம் செல்ல முயற்சிக்கையில் எமது வீரர்கள் நேரடித் தாக்குதலை நடத்தியதில் இண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஐவர் படுகாயமுற்றனர்.

கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து நடைபவனியாகப் புறப்பட்ட சிங்கள இராணுவ அணியினர் கந்தசாமி கோயிலை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் எமது வீரர்கள் நடத்திய சிலிண்டர் தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் இருவர் காயமுற்றனர். திருநகர் ஊடாக கனகபுரம் நோக்கிச் சென்ற இராணுவத்தினர் மீது எம்மால் நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பூநகரி, குஞ்சுப்பரந்தன், ஆலங்கேணி. நல்லூர் ஆகிய இடங்களில் குண்டுவீச்சு விமானங்கள் பொதுமக்கள் வாழும் பகுதிகளைக் குண்டுவீசித் தாக்கின.

## நான்காவது நாள்

நான்காவது நாளாக (7-6-86 அன்று) விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள இராணுவத்துக்கும் இடையில் தொடர்ந்து நடந்த சண்டையில் பரவிப்பாஞ்சான், திருநகர் ஆகிய இடங்களில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். கிளிநொச்சி இராணுவ முகாமை எமது வீரர்கள் சுற்றி வளைத்து இராணுவத்தினர் வெளியே வரமுடியாத அளவுக்கு முற்றுகையை இறுக்கினர். பரவிப்பாஞ்சானில் நடந்த தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் குட்டித்தம்பி, ஹீரோராஜ், தீசன் ஆகிய மூன்று வீரர்கள் வீரமரணமடைந்தனர். விடுதலைப் புலிகளுக்கு எதிர் நிற்க முடியாது சிங்கள இராணுவம் பின்வாங்கியதைத் தொடர்ந்து மூன்று குண்டுவீச்சு விமானங்கள் காலை முதல் மாலை வரை இடைவிடாது 6ம் வாய்க்கால், திருநகர், கணேசபுரம் கனகபுரம், உருத்திரபுரம் ஆகிய இடங்களில் குண்டுமாரி பொழிந்துகொண்டிருந்தன. இக் குண்டு வீச்சினால் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போர்முனையில் புலிகள்

## 05-05-86

தமிழ் மக்களிற்கெதிரான அராஜகக் கும்பலொன்றின் மீது, புலிகள் இராணுவ நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருந்த வேளையில் சிங்கள இராணுவத்தினர் யாழ் நகரத்தை நோக்கி படையெடுப்பை மேற்கொண்டனர். ஆனால் புலிகளின் கவனம் எந்த நேரமும் அரச படைகளின் மீதுதான் இருந்தது என்பதை அவர்கள் உணரவில்லை. யாழ் கோட்டையிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினருடன் புலிகள் நேருக்கு நேரே சமரில் இறங்கினார்கள். கணையெடுப்பை மேற்கொண்டிருந்த புலிகளை முறியடிக்கலாம் என்ற இராணுவத்தின் எண்ணம் நிறைவேறவில்லை. சில மீற்றர் தூரமே அவர்களால் முன்னேற முடிந்தது. சகல நவீனரக ஆயுதங்களையும் உபயோகித்து தாக்கிய புலிகளின் வீராவேசமான தாக்குதலிற்கு முன் நிற்க முடியாத சிங்களப் படையினர் பலத்த சேதத்தின் மத்தியில் தமது சிறைக்குள் (முகாம்) மீண்டும் புகுந்தனர்.

## 19-05-86

யாழ் குடா நாட்டில் மாபெரும் தாக்குதலை சிங்களப் படையினர் மேற்கொண்ட வேளையில் மட்டக்களப்பிலும் அழிவு வேலைகளைச் செய்வதற்காக அரசபடையினர் புறப்பட்டனர். கும்புறுமுனை இராணுவ முகாமிலிருந்த அதிரடிப்படையினர் தமது நவீன ரக கவசவாகனங்களில் புறப்பட்டு வந்தபோது புலிகளின் அதிரடிப்படை அவர்களை இடைமறித்துத் தாக்கியது. கும்புறுமுனை இராணுவ முகாமிலிருந்து சில நூறு மீற்றர் தூரத்திலேயே இத்தாக்குதல் நடைபெற்றது. எமது கண்ணி வெடித் தாக்குதலில் சிக்கிய கவச வாகனமொன்று முற்றாகச் சேதமடைந்தது. அதனைத் தொடர்ந்து இருதரப்பிற்குமிடையே கடும் துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்றது எமது வீரம் பொருந்திய தாக்குதலில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். படுகாயமடைந்த சிங்களப் படையினர் கொழும்பு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். எமது தரப்பில் எதுவித சேதமுமில்லை.

## 30-05-86

தமிழீழத்தின் மீன் வளத்தை நாசமாக்க முற்பட்ட சிங்களப்படையின் முயற்சி புலிகளால் முறியடிக்கப்பட்டது. யாழ் மாவட்டத்திலுள்ள கடற்கரையோர நகரமான வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலுள்ள அரசபடையினர் டைனமைற் வெடிமருந்தினை உபயோகித்து மீன் பிடிப்பதையே வழமையாக கொண்டிருந்தார்கள். இதனால் தமிழீழத்தின் மீன் வளமானது பெரிதும் பாதிக்கப்பட்டதுடன், தமிழ் மீனவர்களது எதிர்காலமும் நிச்சயமற்றதான ஒரு நிலை உருவாகியது. எனவே இராணுவத்தினரின் இச்செயலை முறியடிக்க புலிகள் திட்டமிட்டனர். 30-05-86 அன்று காலை 10 மணியளவில் டைனமைற் வெடிமருந்தினை உபயோகித்து மீன் பிடிக்கச் சென்ற இராணுவத்தினர் மீது புலிகள் பதுங்கித்தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் மீன் பிடிக்கச் சென்ற முன்னணி இராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டார். இதனால் கலக்கமடைந்த இராணுவத்தினர் முகாமிற்குள் ஓடிவிட்டனர்.

## 04-06-86

யாழ் குடாநாட்டின் மீதான சிங்களப்படையினரின் படையெடுப்பு பெரிய தோல்வியில் முடிந்ததையடுத்து, அவர்களின் கவனம் தமிழீத்திற்குத் தேவையான உணவு உற்பத்தியில் கிளிநொச்சி மாவட்டத்தின்மீது திருப்பப்பட்டது. இங்குள்ள மக்களின் அமைதியான வாழ்க்கையை குலைக்கும் நோக்குடனும், தமிழீழத்தின் உணவு உற்பத்தியை நாசமாக்கும் நோக்குடனும் கிளிநொச்சி முகாமிலுள்ள இராணுவத்தினர் ஒரு படையெடுப்பை மேற்கொள்ள முனைந்தனர். இராணுவத்தினரது நடவடிக்கைகளைப்பற்றி தகவலறிந்த புலிகள், படையினரின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்துமுகமாக மூன்று முக்கிய பாலங்களைத் தகர்த்தனர். திருவையாறு பாலம், பரவிப்பாய்ந்தான் பாலம், கிளிநொச்சி கண்டி சாலையிலுள்ள பாலம் என்பன இவையாகும். 04-06-86 அன்று காலை 8 மணியளவில் சுமார் 400 இராணுவத்தினர் முகாமிலிருந்து புறப்பட்டனர். புலிகளது பல கெரில்லா அணிகள் இராணுவத்தினருடன் நேரடிச் சமரில் இறங்கின. இராணுவத்தினரிற்கெதிராகக் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றும் நடத்தப்பட்டது இதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். கூலிக்காக ஆயுதம் ஏந்திய சிங்களப் படையினர் முகாமிலிருந்து 400 மீற்றர் தூரம் வெளியேவர சுமார் 8 மணித்தியாலங்களைச் செலவிட நேர்ந்தது. எனினும் புலிகளின் தாக்குதலிற்குச் சிங்கள இராணுவம் தாக்குப்பிடிக்க முடியாது இறுதியில் பின்வாங்கி முகாமிற்குள் சென்றுவிட்டது.

## 05-06-86

கிளிநொச்சி முகாமிலிருந்து புறப்பட முடியாத சிங்களப் படையினர், மாவட்டம் முழுவதும் பரவலான விமானத் தாக்குதலை மேற்கொண்டனர். மூன்று குண்டுவீச்சு விமானங்களும், இரு கெலிகப்டர்களும் கிளிநொச்சி முழுவதும் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. புலிகளும் விமானப் படைக்கு எதிராகப் பலத்த தாக்குதலில் இறங்கினார்கள். புலிகளின் தாக்குதலின் விளைவாக விமானப்படைக் கெலிகொப்டர் ஒன்று பலத்த சேதத்துக்குள்ளாக்கப்பட்டது. இத்தாக்குதலை 05-06-86 அன்று இரவு கொழும்பு வானொலி ஒப்புக்கொண்டதுடன் விமானப்படைக்குச் சொந்தமான கெலிகப்டரொன்று கிளிநொச்சியில் சேதமடைந்தது எனவும் அறிவித்தது. இதற்கிடையில் கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்த இராணுவத்தினர் மீண்டும் துணிவுபெற்று இனப்படுகொலையை மேற்கொள்ளுவதற்காகப் புறப்பட்டனர். எனினும் புலிகளின் கெரில்லா அணி இவர்களின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தியதுடன், முகாம்வரையும் ஓட ஓட விரட்டியடித்தார்கள். முகாமைச் சுற்றி வளைத்த புலிகள் பல திசைகளிலும் எதிர்த்தாக்குலை மேற்கொண்டனர். இதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், இராணுவ முகாமின் பாதுகாப்பு அரண்கள் சின்னாபின்னமாகிவிட்டது

## 06-05-86

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறிலங்கா [illegible] ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட வேளையில் அப்பாவி தமிழ் மக்களிற்கெதிராகத் தாக்குதலை மேற்கொள்ள எண்ணிய சிங்கள இராணுவம் திருநகர், கனகபுரம், ஆகிய கிராமங்களிற்குள் புகமுற்பட்டனர். ஊரடங்குச் சட்டமென்பது சிங்கள இராணுவத்தினரிற்கேயொழிய புலிகளிற்கில்லை என்பதை அவர்களுக்கு உணர்த்தும் வகையில் கிராமங்களுக்குள் புகுந்த சிங்களப்படையினரைப் புலிகள் சுற்றி வளைத்துக் கடுமையாகத் தாக்கினார்கள். இத்தாக்குதலில் பத்திற்கு மேற்பட்ட அரசப் படையினர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர். இறந்த, காயமடைந்த படையினரைத் தூக்கிக்கொண்டு இராணுவத்தினர் முகாமிற்குள் பின்வாங்கிச் சென்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



: தமிழர்களின் பாரம்பரிய தாய்மண்ணில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை இலங்கையரசாங்கம் உருவாக்கி வருகின்றது. இக்குடியேற்றங்களில் உள்ள பெரும்பாலோர் குற்றச் செயல்களில் ஈடுபட்டு சிறைமீண்ட சிங்களக் காடையர்களாகும். இவர்கள் ஊர்காவல்படை எனும் பெயரில் ஒரு கொலைக்கும்பலை அமைத்து சிங்களக் குடியேற் றங்கள் அமைப்பதற்கு உதவியாக, தமிழீழக் கிராமங்களில் படுகொலைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனைத் தடுப்ப தற்[illegible] விடுதலைப்புலிகள் சிங்கள ஊர்காவல் படை யின[illegible] தாக்குதல்[illegible] தீவிரமாக. இறங்கி வரு[illegible]6-[illegible] அன்று [illegible], சிங்கள ஊர், கா[illegible]படையினரின் ஆயுதக் கிடங்கொன்றை புலிகள் கைப்பற்றினர்கள். இதில் 19 வேட்டைத் துப்பாக்கிகளும் கைக்குண்டுகளும் இருந்தன. ஆயுதக்கிடங்கை காவல் புரிந்த ஊர்காவல் படையினர் புலிகளைக் கண்டதும் தலை தெக்றிக ஓடிவிட்டனர்.

: யாழ் குடாநாட்டில் புலிகளின் முற்றுகையில் சிக்கிய சிங்களப்படையினர் அடிக்கடி வெளியே வர முற்பட்டு சேதத்திற்குள்ளாகின்றார்கள். யாழ்கோட்டை இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட சிங்கள இராணுவத்தினா சில நூறு மீற்றர் தூரத்திலுள்ள பண்ணைப்பாலத்தினூடாக ரோந்து செல்ல முற்பட்டனர். முகாமிற்கு வெளியே இராணுவத்தினரின் நடமாட்டத்தை அறிந்த, புலிகளின் விடுதலையணிப் பிரிவொன்று, இராணுவத்தினர் மீது மோட் டார் தாக்குதல் நடத்தியது. மறுநாள் 07-06-86 அன்று காலை கொழும்பு வானொலி யாழ் பண்ணைப் பாலத்தில் இடம் பெற்ற சம்பவத்தில் இரு இராணுவத்தினர் படுகாயமடைந்து பின்பு மரணமானார்கள் எனக் கூறியது.

## 07-06-86

[illegible]முகாமிலிருந்த நூற்றியம்பதிற்கு கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்த நூற்றியம்பதிற்கு மதிகமான சிங்கள இராணுவத்தினர் நடைபவனியாக இன ஒழிப்பு நடவடிக்கையை மேற்கொள்ளப் புறப்பட்டனர். பரவிப்பாய்ந்தான் எனுமிடத்தில் சிங்களப் படையினை எதிர்கொண்ட புலிகள் கடுஞ் சமரில் இறங்கினார்கள். நவீன ரக ஆயுதங்களுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த மோதலில் ஐந்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர். இராணுவத்தினருடன் நடை பெற்ற வீரஞ்செறிந்த தாக்குதலில் குட்டித்தம்பி, தீசன் ஹிரோராஜ் எனும் வீரமறவர்கள் வீரமரணமடைந்தார்கள்.

பரவிப்பாய்ந்தானில் எமது கெரில்லா அணியானது இராணுவத்தினருடன் போரிட்டுக் கொண்டிருந்த அதே வேளையில், நூற்றுக்கதிகமான படையினர் கிளிநொச்சி முகாமை விட்டுப் புறப்பட்டனர். கரடிப்போக்கு எனுமிடத் தில் புலிகளின் மற்றுமொரு கெரில்லா அணியானது அரச படையினரை எதிர்கொண்டது. காட்டுப்புறத்திலிருந்து திடீரென எமது கெரில்லா அணியானது நிகழ்த்திய பதிலடித் தாக்குதலில் அரச படையினர் பலத்த சேதத்திற்குள்ளானார் கள். ஆறு சிங்களப் படையினரை இழந்த சிறீலங்கா இராணுவம் புலிகளின் தாக்குதலிற்கு முன்னிற்க முடியாது புறமுதுகு காட்டி ஓடியது. [illegible]ன் இடம்பெற்ற வீரப் போரில் சசி எனும் வீர இளைஞன் புலிகளின் தரப்பில் வீர ம[illegible]

[illegible] கிளிநொச்சி மாவட்டத்தில் சிறீலங்கா அரசின் விமானப் படையுனது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை கட்டவிழ்த்துக் கொண்டிருந்த வேளையில் யாழ்குடா நாட் டின் கடற்கரையோர நகரமான வல்வெட்டித்துறையை முற்றாக அழிக்க சிறீலங்கா இனவாத அரசு கங்கணம் கட்டிக் கொண்டிருந்தது இதற்கான நடவடிக்கைகளிலும் அதி தீவிரமாக இறங்கியது. கடலிலிருந்து கடற்படைக் கப்பல்கள் மூலம் பீரங்கித் தாக்குதல்களும், முகாமிலிருந்து பீரங்கித் தாக்குதல்களும், மோட்டார் தாக்குதல்களும் கடுமையாக இடம் பெற்றன. இவர்களுக்கு உதவியாக இலங்கை விமானப்படையும் சேர்ந்துகொண்டது. விமானப்படையின் இரு கெலிகப்டர்கள் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டன. நகர பாது காப்பு நடவடிக்கையில் இறங்கிய விடுதலைப் புலிகள் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளைக் கொண்டு மிகவும் கடுமையாகத் தாக்கினார்கள். இத்தாக்குதலில் சிக்கிய கெலிகொப்ட ரொன்று கடுஞ் சேதமடைந்தது. இதனைச் செலுத்திய வெள்ளி நாட்டு விமான ஓட்டியொருவரின் நிலை கவலைக்கிடமாகி யுள்ளது. இவரை மற்றுமொரு கெலிகப்டரில் ஏற்றி கொழும்பு மருத்துவமனைக்கு அவசர அவசரமாகக் கொண்டு சென்றார்கள்.

## 10-06-86

வல்வை இராணுவ முகாமிலிருந்த சிங்களப் படையினர் இன ஒழிப்பை மேற்கொள்ளுவதற்காக வெளியே வந்த போது புலிகளின் அதிரடிப்படை அவர்களை இடைமறித்துத் தாக்கியது. எமது உக்கிரமான தாக்குதலில் மூன்று சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந் தனர். இறந்த சிங்கள இராணுவத்தினரின் உடல்களு அருகே சிங்களப் படைகள் நெருங்காதவாறு புலிகள் வீரப் போர் புரிந்தனர். இறுதியில் குண்டு வீச்சு விமானங்களைப் பயன்படுத்தி போர்க்களம் முழுவதும் குண்டுகளை வீசிய பின்னரே இறந்த துருப்புகளின் உடல்களை அவர்களால் மீட்க முடிந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள இராணுவ முகாமிலிருந்த அரச படையினர் தமிழீழ மக்களின் சகஜ வாழ்க்கையைக் குழப்புவதற்காகப் புறப்பட்டனர், நூற்றிற் கதிகமான இராணுவத்தினர் திருவையாறு இரணைமடுக்குளம் பாதையினூடாக நடைபவனியாக வந்துகொண்டிருந்த போது புலிகளின் படையொன்று பதுங்கித் தாக்குதலை மேற் கொண்டது. வீரஞ்செறிந்த இத்தாக்குதலில் மூன்று இராணு வத்தினர் கொல்லப்பட்டனர். எஞ்சிய இராணுவத்தினர் புலி களின் உறுதியான தாக்குதலிற்கு ஈடுகொடுக்க முடியாது புறமுதுகு காட்டி ஓடினார்கள்.

## 11-06-86

: கடலிலிருந்து பீரங்கித் தாக்குதல்களும், ஆகாயத்தி லிருந்து குண்டுவீச்சுத் தாக்குதல்களும் சரமாரியாக நடை பெற்றுக் கொண்டிருக்க வல்வெட்டித்துறை இராணுவத்தினர் நகரை அழிக்கும் நோக்கத்துடன் புறப்பட்டனர். எனினு இவர்களது எண்ணம் ஈடேறவில்லை. புலிகளின் அதிரடித் தாக்குதலிற்கு ஈடுகொடுக்க முடியாது இராணுவத்தினர் முகாமிற்குள் சென்று பதுங்கிக் கொண்டனர்.

: தமிழீழத்தின் கடற்கரையோர நகரமான வல்வெட்டித் துறையில் கடற்படையினரின் அட்டகாசங்கள் அதிகரித்து வருகின்றன. இவர்கள் நகரை அழிக்கும் நோக்குடன் தமது கடற்படைக் கப்பல்களிலிருந்து, பீரங்கிப்படகுகளிலிருந்தும் தொடர்ச்சியான "செல்" (வெடிகுண்டு) தாக்குதல்களை மேற் கொண்டனர். இதனைத் தொடர்ந்து 6 பெரிய பீரங்கிப் படகுகள் பாதுகாப்புக் கொடுக்க, இரு படகுகளில் கடற்படை யினர் வல்வெட்டித்துறை முகாமை நோக்கி வந்தனர். கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண் டிருந்த புலிகள் கடற்படைப் படகுகளிற்கெதிராகக் கடும் தாக்குதலை மேற்கொண்டனர். எமது வீரர்களின் உறுதி யான, குறிதவறாத தாக்குதலில் கடற்படைப் படகொன்று பற்றியெரிந்தது. இதிலிருந்த ஆறு கடற்படையினரும் கொல்லப்பட்டதுடன், படகும் முற்றாக நாசமாகிவிட்டது. படையினருக்கெதிரான இத்தாக்குதலின் மூலம் வல்வெட்டித் துறை இராணுவ முகாமிற்கு அவசியமான உணவுப் பொருட்கள் போன்றவழங்கல்களைப் புலிகள் தடுத்து நிறுத்தி யுள்ளார்கள்.

www.tamilarangam.net



: கடற்படையினருக்கு எதிராக வெற்றிகரமான தாக்குதலை மேற்கொண்டபின்னர் சிறிலங்கா விமானப்படையினருக்கு எதிராகவும் புலிகள் தாக்குதலில் இறங்கினுர்கள். வல்வை நகரைச் சுற்றிச்சுற்றிக் குண்டு வீசிக்கொண்டிருந்த இரு குண்டுவீச்சுவிமானங்களின்மீதும், இரு கெலிகப்டர்களின் மீதும் எமது வீரர்கள் கடும் தாக்குதல்களை நடாத்தினுர்கள். இதில் கெலிகப்டரொன்று பலத்த சேதமடைந்து தரையிறக்கப்பட்டது. கெலிகப்டருக்கு ஏற்பட்ட சேதத்தையறிந்த குண்டுவீச்சு விமானங்கள் உயரே பறந்து வானில் மறைந்து விட்டன.

கிளிநொச்சி மக்களின் அன்ருட அமைதியான வாழ்க்கையைக் குலைத்துக்கொண்டிருந்த கிளிநொச்சி முகாமிலுள்ள இராணுவத்தினர் மீது புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. கிளிநொச்சி முகாமைச் சுற்றி வளைத்த புலிகளின் இளம்படையினர் தமது கனரக மோட்டார் தாக்குதல்களை மேற்கொண்டனர். புலிகளின் புதிய கண்டுபிடிப்பான இம் மோட்டாரில் சாதாரண செல்லை (வெடிகுண்டை) விட அதிக வெடிமருந்து கொண்டதும் அதிக சக்தி வாய்ந்ததுமான செல் (வெடிகுண்டு) உபயோகிக்கப்படுகின்றது. இவ்வகை செல்களில் வெடிகுண்டுகளில் ஆறு செல்கள் (வெடிகுண்டுகள்) எமது இளம்படையினரால் கிளிநொச்சி முகாமினுள் ஏவிவிடப்பட்டது. இவை அனைத்தும் முகாமினுள் சென்று வெடித்ததில் இராணுவத்தினருக்கு பாரிய இழப்பை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் 12 மணிநேர ஊரடங்கு சட்டத்தை சிங்கள அரசாங்கம் பிறப்பித்தது.

## 12-06-86

மன்னுரில் தேடி அழிக்கும் நடவடிக்கையில் இறங்க முற்பட்ட சிங்களப் படையினருடன் எமது சிறப்பு அதிரடிப் படையினர் கடுமையான மோதலில் இறங்கினுர்கள். தள்ளாடி முகாமிலிருந்து 38 நவீனரக கவச வாகனங்களில் பவனிவந்த இராணுவத்தினரை மாந்தை எனுமிடத்தில் எமது அதிரடிப் படையினர் இடைமறித்துத் தாக்கினுர்கள். இராணுவத்தினரிற்கு உதவியாகச் சிறிலங்கா அரசின் விமானப்படைகள் பாதுகாபபுக் கொடுத்தன. குண்டுவீச்சு விமானங்களும், கெலிகாப்டர்களும் கடுமையான குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டனர். எனினும் எமது அதிரடிப் படையினரின் மனவுறுதி குன்ருத வீரத் தாக்குதலில் இராணுவத்தினர் நிலைகுலைந்தனர். எமது ரெக்கட் தாக்குதலில் இரு கவச வாகனங்கள் முற்ருகச் சேதமாகியதுடன 5 இராணுவ வீரர்களும் கொல்லப்பட்டனர். 8 மணி நேரம் நடைபெற்ற இச்சமரில் இளம் விடுதலைப் புலி அருச்சனு வீரமரணமடைந்தான்.

ஆயுதப் பயிற்சியெடுத்த சிங்கள ஊர்காவற் படையினரைத் தேடியழிக்கும் நடவடிக்கையில் மிகத் தீவிரமாக புலிகள் இறங்கியுள்ளார்கள். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்குத் தேவையான குடியேற்றங்களை அமைப்பதற்கு இந்த ஆயுதம் தாங்கிய ஊர்காவல்படையினர் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது. 12-6-86 அன்று திருகோணமலை மாவட்டத்திலுள்ள கொறவப்பத்தானை எனுமிடத்தில் சிங்கள ஊர்காவல் படையினரைப் புலிகள் துரத்தித் துரத்திச் சுட்டனர் இச்சம்பவத்தில் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதுடன் அவருடைய துப்பாக்கிகளும் எம்மால் கைப்பற்றப்பட்டன.

## 14-06-86

யாழ் மாவட்டத்திலுள்ள வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து இரு வேறு பிரிவாகப் புறப்பட்ட கறுப்புச் சட்டை இராணுவத்தினருடன் எமது வீரர்கள் மோதினுர்கள். பாகிஸ்தானில் சிறப்புப் பயிற்சியெடுத்த இந்தக் கறுப்புச் சட்டைகள் புலிகளின் தாக்குதலிற்கு முன்நிற்க முடியாது சிதறியோடினுர்கள். இரு வேறு இடங்களில் நடைபெற்ற இத்தாக்குதல்களில் மொத்தமாக நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து வெளிநாட்டுக் கூலிப்படையினரால் செலுத்தப்பட்ட கெலிகப்டரின் மூலம் கடுமையான தாக்குதலை மேற்கொண்ட பின்னரே இறந்த அரசபடையினரின் உடல்களை அவர்களால் மீட்க முடிந்தது.

: கிளிநொச்சி இராணுவ முகாம்மீது புலிகளால் மோட்டார் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அதிக சக்தி வாய்ந்த புதிய செல்களை உபயோகித்து புலிகள் தாக்கினுர்கள். புலிகளால் ஏவப்பட்ட அனைத்து செல்களும் முகாமிற்குள் விழுந்து வெடித்துச் சிதறியதில் இராணுவத்தினருக்குப் பலதத சேதம் ஏற்பட்டிருக்கின்றது.

# ஒலிக்க இருக்கும் புதிய குரல்!

தமிழர்களுக்காக கடந்த காலத்தில் இலங்கைப் பாராளுமன்றத்தில் ஒலித்துக் கொண்டிருந்த கலவானை பாராளுமன்ற உறுப்பினர் தோழர்சரத்முத்தெட்டுவேகம அவர்களின் அகால மறைவையடுத்து அவரின் இடத்துக்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தோழர் டி. இ. டபிள்யூ குணசேகரவை தேர்ந்தெடுத்துள்ளது.

தோழர் சரத்தின் இடத்துக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் தோழர் டி. இ. டபிள்யூ குணசேகர அவர்கள் "தோழர் சரத் விட்டுச் சென்ற பணியைச் சிறப்பாகத் தொடர்வேன், தமிழர்களுக்கு அநீதி என்ருல் எனது குரல் மேலோங்கத் தயங்காது. சிறுபான்மை மக்களுக்கு, தொழிலாளர் வர்க்கத்துக்கு, சாதாரண பொதுமக்களுக்கு அநீதி என்ருல் அதற்கு எதிராகத் தொடர்ந்து போராடுவேன். தமிழர்களுக்காக எனது குரல் பாராளுமன்றத்தில் ஒலிக்கும்" என்று தெரிவித்திருக்கிருர், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வெளியியுறவுப் பிரிவு செயலாளரான தோழர் டி. இ. டபிள்யூ குணசேகர அவர்கள் கடந்த மார்ச் மாதம் பாட்னு நகரில் நடைபெற்ற அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 13-வது தேசிய மாநாட்டில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கலந்துகொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.



D. E. W. குணசேகரா

www.tamilarangam.net



# ஏன் இந்த முரண்பாடுகள்?

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், 'டெலோ'வுக்குமிடையே அண்மையில் நடைபெற்ற 'மோதல்' பற்றி 'டெலோ' தரப்பிலும், 'டெலோ ஆதரவாளர்'கள் மூலமும் பலவேறு கருத்துக்கள், அறிக்கைகள் செவ்வி (பேட்டி)கள் வெளிவந்துள்ளன. முன்னுக்குப் பின் முரணான, ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத துளியளவுகூட 'உண்மை'யில்லாத அந்த அறிவிப்புக்கள் அவர்களின் **இயக்கம் எப்படிப்பட்டது** என்பதை வெளிப்படையாக உணர்த்துகின்றன.

அப்படிப்பட்ட முரண்பாடுகளில் **ஒரு சிலவற்றை** மட்டும் இங்கே சுட்டிக் காட்டுகின்றோம்.

## புலிகளோடு மோதியதில் 'படுதோல்வி' யடைந்து சரணடைந்தது ஏன் தெரியுமா?

"முகாம்களில் இருந்த அனைவரும் உணவருந்திக் கொண்டிருந்த நேரம், வஞ்சகமான, முறையில், ***'எதிர்பாராத'*** தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொண்டதால் 'டெலோ'வினர் தோல்வியுற நேர்ந்தது."

(டெலோ ஆதரவு நாளேடு,-தினகரன், 8-5-86)

"பொதுவாகச் சிங்கள இராணுவம் வந்தால், ஈழத் தமிழர்கள், போராளிகளுக்குத் தகவல் கொடுப்பது உண்டு. ஆனால் அன்று விடுதலைப் புலிகள் வந்ததால் அவர்களும் தமிழர்கள்தானே என்ற எண்ணத்தில், ஈழத் தமிழர்கள் யாரும் 'டெலோ' இயக்கத்துக்குத் தகவல் (?) கொடுக்கவில்லை. இதைத் தங்களுக்குச் சாதக (!)மாகப் பயன்படுத்திக்கொண்ட விடுதலைப் புலிகள் டெலோ வீரர்கள் மீது பயங்கரத் தாக்குதல் நடத்திக் கொன்று குவித்தனர்.

***(தினகரன், 29-5-86)***

யாழ்ப்பாணத்தில் டெலோ வீரர்கள் இரவில் **உறங்கிக்(!)** கொண்டிருந்த நேரத்தில் அவர்கள் மீது **தாக்குதல்** நடத்திப் படுகொலை செய்திருக்கிறார்கள்!

***—டெலோ ஆதரவாளர் சுப்பிரமணியசுவாமி***
***(தினமணி, 2-6-86)***

அவர்கள் (விடுதலைப் புலிகள்) கண்மூடித்தனமாகத் தாக்குகிறார்கள். நாம் பதிலடி கொடுக்க வேண்டாமா என்று கேட்டோம். அதற்குச் சபாரத்தினம்,

"நமக்கு எதிரி சிங்கள இராணுவத்தினர்தான்! தமிழ்ச் சகோதரர்கள் அல்லர்; தெரிந்தோ தெரியாமலோ இப்படிப்பட்ட மூர்க்கத்தனமான தாக்குதலில் இவர்கள் (புலிகள்) ஈடுபட்டுள்ளனர். இது சிலரின் சூழ்ச்சியாகக்கூட இருக்கலாம். இதற்கு நாம் பலியாகக் கூடாது" என்று உத்தரவிட்டார்.

எங்கள் தலைவரின் இந்த உத்தரவை நாங்கள் மீறவில்லை. அதனால் இதை, விடுதலைப் புலிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு விட்டனர்.

***தாக்குதலிலிருந்து தப்பிவந்த டெலோ வீரர் சந்திரன் ஹென்றி பேட்டி (தினகரன், 16-5-86)***

நட்புரிமையோடு வருகிறார்கள் என்று டெலோ இயக்கத்தினர் நினைத்து, இவர்களைச் சந்திக்க வெளியே வந்தபோது துப்பாக்கிகளை எடுத்து மிருகத்தனமாக அவர்களைப் பிரபாகரன் இயக்கத்தினர் சுட்டிருக்கிறார்கள்.

***—டெலோ ஆதரவாளர் சுப்பிரமணியம் சுவாமி***
***(துக்ளக்—ஏப்ரல் பேட்டி)***

"உங்கள் துப்பாக்கிகளைச் சிங்கள இராணுவத்துக்கு எதிராக அன்றி வேறு ஒருவருக்கும் எதிராகத் தூக்கக்கூடாது" என்று எம் (டெலோ) தலைவர் அவர்களின் தார்மீகக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து எம் இனத்துக்கு எதிராக எம் போராளிகள் துப்பாக்கிகளைத் தூக்கவில்லை."

***—டெலோவின் புதிய தலைவர் செல்வம்***
*(பேட்டி ஜூனியர் விகடன் 28-5-86)*

## சிறீ சபாரத்தினம் சரணடைந்தாரா போராடிச் செத்தாரா?

"தமிழ் மக்களுக்காகப் போராட வந்தேன். அந்தத் தமிழ் மக்களுக்காகவே உயிரை விடுகிறேன்"- என்று சபாரத்தினம் கூறிவிட்டு வெளியே வரப் புறப்பட்டார். அவரை வெளியே போகாதீர்கள் என்று **வீட்டுக்காரர்கள்** தடுத்திருக்கிறார்கள்."

"என்னால் அப்பாவித் தமிழர்கள் உயிர் பறிக்கப் படக்கூடாது" என்று அவர்களை மீறிச் சபாரத்தினம் வெளியே வந்தார். அப்போது அவரை விடுதலைப் புலிகள் சரமாரியாகச் சுட்டுக் கொன்றார்கள். சபாரத்தினம் உடலில் 28 குண்டுகள் பாய்ந்து இருந்ததாக உடலைப் பார்த்தவர்கள் சொன்னார்கள்.

***—புலிகளின் தாக்குதலுக்குத் தப்பிவந்த டெலோ போராளிகளின் பேட்டி (16-5-86 தினகரன்)***

இலங்கைக அரசு கூறியதுபோலச் சபாரத்தினம் தனது கைகளை மேலே தூக்கியபடி **முகாமை விட்டு** வெளியே வந்து சரண் அடையவில்லை. அவர் ஒரு ***மாவீரனாகவே போராடித்தான் மடிந்தார்.***

***—டெலோ இயக்க வீரர்கள் கூறியது.***
***(தினகரன் - 9-5-86)***

"கோண்டாவில்" டெலோ முகாமை விடுதலைப் புலிகள் முற்றுகையிட்டபோது முகாமில் நாங்கள் 70 பேர்கள் இருந்தோம். தலைவர் சிறீ சபாரவம் எம்முடன் இருந்தார். அப்போது எம் வசம் இரண்டே இரண்டு **துவக்குகளும்** கையெறி குண்டுகளும் மட்டுமே இருந்தன. புலிகள் எம்மோடு 5 மணி நேரம் கடுஞ் சமர் புரிந்தனர்.

***—தாக்குதலிலிருந்து தப்பி வந்த சந்திரன் என்றி பேட்டி (தினச் சுடர் நாளிதழ்)***

சிறீ சபாரத்தினம் தமது 'எம்-16' கருவியுடன் எதிர்த் தாக்குதல் மேற்கொண்டார்.

***—ஆதாரம்*** (பிரண்ட் லைன் மே 4-86)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சபாரத்தினம் தகப்பனார் எங்கே இருந்தார்?

இந்தச் சம்பவங்களில் விடுதலைப் புலிகள் மனிதாபிமானத்துடன் நடந்துகொண்டதாக ஒன்றே ஒன்றை மட்டும் கூறலாம். படுகொலை செய்யப்பட்ட 'டெலோ' தலைவர் சபாரத்தினம் உடலை, விடுதலைப் புலிகள் **அவரது தந்தையிடம் எடுத்துச் சென்றனர்.** அவர் தனது மகன், முதுகில் சுடப்படாமல் மார்பில் குண்டு பாய்ந்து இறந்ததாகக் கண்டு **மகிழ்ச்சியடைகிறேன்** என்று கூறினார். ஆனால், **உடலைப் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.** இதனால் விடுதலைப் புலிகளே சபாரத்தினம் உடலை எரித்துவிட்டனர்.

U.N.I நிருபர் **செய்தி** —(**தினகரன் 14-5-86**)

''விடுதலைப் புலிகள் தங்களை மனிதாபிமானம் உள்ளவர்கள் என்று காட்டிக்கொள்வதற்காகப் 'பொய்' சொல்லுகிறார்கள். சிறீ சபாவின் தகப்பனார் இங்கே சென்னையில் இருக்கும்போது எப்படி அவரிடம் சபாவின் சடலத்தை ஒப்படைத்திருக்கமுடியும்? இது புலிகளின் திட்டமிட்ட பொய்!''

**—டெலோ வீரர்கள் சார்லஸ் ஹென்றியின் பேட்டி (இலஸ்ட்ரேட்டட் வீக்லி ஜூன் 8-86)**

—இப்படியொரு செய்தியைத் தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருபோதும் வெளியிடவில்லை. செய்தியைப் பரப்பியதும் 'டெலோ' ஆதரவாளர்கள் அதே செய்தியை மறுத்திருப்பதும் அவர்களே!

அதுமட்டுமல்ல, 28-5-86 - ஜூனியர் விகடன் பேட்டியில் புதிய தலைவர் செல்வம் தம் இயக்கத்திற்கு **பொதுமக்களால் கையளிக்கப்பட்ட** ஐந்தாறு வாகனங்களைத் தவிர வேறு **எதுவுமே** தங்களிடம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

—அதாவது தமது இயக்கமே மிகவும் 'ஏழை இயக்கம்' என்பது அவரது நிலை!

—ஆனால் டெலோ ஆதரவாவான சந்திரகாசனும், ஆதரவு ஏடுகளான குங்குமமும், தினகரனும் வெளியிட்டுள்ள செய்திகளோ,

அந்த இயக்கத்திடம் விமானங்களும், அதிநவீனமான போர்க் கருவிகளும், அவற்றை இயக்கும் பயிற்சி பெற்றிருந்த மிகத் திறமை வாய்ந்த வீரர்களும் இருந்ததாகக் குறிப்பிடுகின்றன.

தலைவர் ஒருவர் தங்கியிருந்த **'பாசறை'யில்** இரண்டு துவக்குகளுக்கு மேல் இல்லவே இல்லை என்று சொல்லுவதை நினைத்து **அழுவதா?**

இரண்டு விமானங்களே எம்மிடம் இருந்தன என்று பீற்றிக்கொள்ளுவதை நினைத்துச் சிரிப்பதா?

## ஏன் இந்த முரண்பாடுகள்?

உண்மைக்கு அலங்காரம் தேவையில்லை. பொய்க்குத்தான் அலங்காரம் தேவை. —

# விடுதலைப் புலிகளின் சிறப்பான மக்கள் சேவை!

## செய்திக் கதிர் ஏடு பாராட்டு!!

***விமானக் குண்டுவீச்சிலிருந்து தமிழ் மக்கள் தங்களை எப்படித் தற்காத்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றிய விளக்கப்படத்தைத் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது பரீட்சார்த்த தொலைக்காட்சியின் மூலம் ஒலிபரப்பி வருவதைப் பாராட்டி 1-6-86 அன்று வெளியான செய்திக் கதிர் பத்திரிகையில் வெளிவந்த செய்தி.***

வட இலங்கையில் போர் விமானங்கள் குண்டு வீச்சு நடத்துவது இப்போது சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது விமானத் தாக்குதலிலிருந்து மக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்குப் பதுங்குகுழிகள் வெட்டவும், தண்ணீர்த் தொட்டிகள் அமைக்கவும், முதலுதவி அளிக்கவும் இவை பற்றி ஆலோசனை கொடுக்கவும் ''ஏ. ஆர். பி.'' என்னும் விமானத் தாக்குதல் முற்பாதுகாப்பு அமைப்பு நாடு முழுவதும் அமைக்கப்பட்டுச் செயற்பட்டது. வட பகுதியிலும் இது பெரும் பணியாற்றியது என்றாலும் இன்று போல் அன்று வட இலங்கை விமானக் குண்டு வீச்சுக்கு உள்ளாகவில்லை.

இன்று ''ஏ.ஆர்.பி.'' அமைப்பு இல்லை. ஆனால் கடந்த சில வாரங்களாக சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு எட்டு மணி முதல் விடுதலைப் புலிகளின் பரீட்சார்த்த ஒளிக் காட்சியில் (டெலிவிசனில்) விமானத் தாக்குதலிலிருந்து மக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கான வழிமுறைகள் விபரமாகக் காட்டப்படுகின்றன.

பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கத் தவறினால் என்ன நேருமென்பதைச் சமீபத்தில் நடந்த குண்டு வீச்சுக்களினால் மாண்டவர்களைப் பற்றிய புகைப் படங்கள் செய்திகளையும், ''செய்திக் கதிர்'' ''ஈழமுரசு'', ''ஈழநாடு'', ''வீரகேசரி'', ''உதயன்'' ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்தவற்றை ஆதாரமாகக் காட்டுவது ஏ. ஆர். பி. சேவையை விடச் சிறந்ததென்றே சொல்லவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழத்தில் அரச பயங்கரவாதம்

## 19-05-86

யாழ் குடாநாட்டின் மீதான சிங்கள அரசின் படையெடுப்பில் அப்பாவிப் பொதுமக்களிற்கு அனர்த்தம் விளைந்துள்ளது. பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். சிங்கள விமானப்படையினரின் தாக்குதலிற்கு இலக்காகி பல வீடுகள், கடைகள், கோவில்கள், மருத்துவமனைகள், போன்றன கடுஞ்சேதத்திற் குள்ளாக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் மக்களுடைய பொருளாதாரம் சேதமாக்கப்பட்டுள்ளது. விவசாயம், மீன்பிடித் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மக்களுடைய அமைதியான வாழ்க்கை குலைக்கப்பட்டுள்ளது.

யாழ் கோட்டை இராணுவத்தினர் வெளியே வந்து இனப்படுகொலையைச் செய்ய முடியவில்லை என்ற ஆதங்கத்தில், கோட்டைக்குள்ளிருந்தே மோட்டார்த் தாக்குதலையும், பீரங்கித்தாக்குதலையும் மேற்கொண்டனர். போதாக்குறைக்கு சிங்கள விமானப்படை விமானங்களும், கெலிகப்டர்களும் குண்டுவீச்சு தாக்குதலை மேற்கொண்டன. அரச பயங்கரவாதிகளின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் 12 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். நகரின் மையப்பகுதியிலமைந்துள்ள பல கடைகள், கட்டிடங்கள் சேதமடைந்தன. அரசப்படைகளின் தாக்குதலிற்கு நிவாரணமளிக்கும் யாழ் பொது மருத்துவமனையும் சேதத்திற்குள்ளாகியது. நோயாளிகள் சிகிச்சைபெற்றுக் கொண்டிருக்கும் மருத்துவமனையொன்றைத் தாக்குவது போன்ற மனிதநாகரிகத்திற்கே ஒவ்வாத செயல்களைச் சிறீலங்கா அரசு தமிழீழத்தில் மேற்கொண்டு வருகின்றது.

ஊர்காவல்துறையில் அரச கடற்படையினர் தமது மிருகத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டனர். இவர்களிற்கு இணையாக விமானப் படையும் சேர்ந்து கொண்டு தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியது. கடற்படையினரினதும், விமானப்படையினரதும் கூட்டிணைந்த வெறியாட்டத்தில் ஐந்து அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர். இவர்களின் விபரம் வருமாறு :

திருமதி லூர்த்தம்மா (55) - கரம்பன்
திருமதி சிறி (35) - பொன்னாச்சியடி
பெரியதம்பி (35) - கம்றோட், ஊர்காவற்துறை
சின்னக் கோகிலன் (25) - கம்றோட்
சவுரி ஊர்காவற்துறை

வல்வெட்டித்துறை கடற்பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற தமிழ் மீனவர்களைச் சிங்கள அரசின் விமானப்படை கெலிகப்டர் துரத்தித் துரத்திச் சுட்டது தமிழர்களுடைய பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதே அரசின் நோக்கமாகும். விமானப்படையினரின் தாக்குதல்களில் காயமடைந்த மீனவர்கள் உடனடியாகக் கரை திரும்பினார்கள். இதனைத் தொடர்ந்து வல்வை நகரின் மீது இரு குண்டு வீச்சு விமானங்களும், கடல் விமானமொன்றும், கெலிகப்டர்கள் மூன்றும் கடுமையான தாக்குதலை மேற்கொண்டன. தமிழ் மக்களுடைய அன்றாட வாழ்க்கையைச் சீர்குலைப்பதுடன் அவர்களிற்கு உளவியல் ரீதியாக பாதிப்பை ஏற்படுத்துவதே சிங்கள அரசின் குறிக்கோளாகும். புலிகளின் ஆலோசனையின்பேரில் விமானப்படைத் தாக்குதல்களிற்கெதிராகப் பொதுமக்கள் பதுங்கு குழிகளில் பதுங்கி பாதுகாப்பு எடுத்ததால் பெருமளவு சேதம் தவிர்க்கப்பட்டது. எனினும் 10 வீடுகள் வல்வெட்டித்துறையில் சேதமடைந்தன.

தற்காலிக முகாமொன்றை வசாவிளான் பாடசாலையொன்றில் அமைத்துள்ள அரச பயங்கரவாதிகள், வசாவிளான் வாழ் மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களைக்கட்டவிழ்த்து விட்டுள்ளார்கள். தமது முகாம் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற முக்கிய நோக்கத்தினால் அயலிலுள்ள வீடுகள் பலவற்றைத் தீயிட்டு எரித்துள்ளார்கள். அத்துடன் முகாமிலிருந்து மோட்டார், பீரங்கித் தாக்குதல்களையும் மேற்கொண்டுள்ளார்கள். விமானப்படையும் இவர்களுடன் சேர்ந்து வசாவிளான் மீது நடத்திய தாக்குதல்களின் 95 வயது நாகமுத்து என்பவர் படுகாயமடைந்தார். வேறு பலரும் காயமடைந்துள்ளார்கள்.

## 20-05-86

கிழக்கு மாகாணத்தில் அரச பயங்கரவாதிகள், சிங்களக் குடியேற்றங்களை அமைப்பதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்களிற்குத் துணையாக கடைந்தெடுத்த சிங்களக் காடையர்களை ஊர்காவற்படை என்ற பெயரில் அரசு அமைத்துள்ளது. இக்காடையர்களும் அரச படையினரும் மூதூரிலுள்ள ஆலங்கேணி என்ற இடத்தைச் சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையில் தீவிரமாக இறங்கினார்கள். இதன் விளைவாக அப்பாவிப் பொதுமக்களில் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் 5பொதுமக்கள் படையினால் கைதுசெய்யப்பட்டு முகாமிற்குள் அழைத்து செல்லப்பட்டனர்.

## 22-05-86

யாழ் மாவட்டத்திலுள்ள செம்பியன்பற்று எனுமிடத்தில் இரு குண்டு வீச்சு விமானங்களும், கடல் விமானமொன்றும், நான்கு கெலிகாப்டர்களும் வெறித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன. செம்பியன்பற்று வாழ் மக்கள் விமானத் தாக்குதலிற்கு எதிராகப் பாதுகாப்பு எடுத்ததினால்பெருமளவு சேதத்தைத் தவிர்த்தார்கள். மகனும் இரு குழந்தையும் உட்பட 4 பேர் கொல்லப்பட்டனர். நான்கு தமிழர்கள் காயமடைந்தார்கள். 03 வீடுகள் சேதமடைந்தன. வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வானொன்று சேதமடைந்தது.

www.tamilarangam.net





கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அம்பாறை மாவட்டம் புல்லுமலை என்ற கிராமத்தைச் சிங்களக் காடையர்களும், அசர பயங்கரவாதிகளும் சுற்றிவளைத்தார்கள். இவர்கள் அப்பாவிப் பொதுமக்கள் மீது மிருகத்தனமான தாக்குதல்களைக் கட்டவிழ்த்தனர். பொதுமக்களின் உடைமைகளைக் கொள்ளையடித்தனர். இரு நூறிற்கு மேற்பட்ட கடைகளும், வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டு முற்றுகச் சேதமடைந்தன. அத்துடன் 15 அப்பாவிப் பொதுமக்கள் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். பல பெண்கள் கற்பழிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். ஐநூறிற்கு மேற்பட்ட தமிழ் குடும்பங்கள் அகதிகளாக கிராமத்தினை விட்டு வெளியேறி அயல் கிராமங்களில் புகுந்துள்ளார்கள்.

## 25-05-86

திருகோணமலை தொடர்ந்து அரச பயங்கரவாதிகளின் வெறித் தாக்குதல்களிற்கு இலக்காகி வருகின்றது. இங்கு வாழும் தமிழ்க் குடும்பங்களின் மீது முப்படைகளுடன், சிங்கள ஊர்காவல் படையினரும் இணைந்து தாக்குதல்களை நடத்திவருகின்றார்கள். இச்செயல்கள், திருகோணமலையை அரசு ஆக்கிரமிக்க முற்படுவதை எமக்கு உணர்த்துகின்றன. 25-05-86 அன்று ஆலங்கேணி என்ற கிராமத்தைச் சுற்றி வளைத்த அரச படையினர் தமிழ் மக்களிற்குச் சொந்தமான 40 வீடுகளை எரித்து நாசமாக்கியுள்ளார்கள். இதனால் பீதியடைந்த மக்கள் கிராமத்தினை விட்டு வெளியேறினார்கள். அத்துடன் தம்பலகாமத்தில் இருவரும், சம்பூரில் ஒருவரும், ஆரக்கல்லில் மூவருமாக, ஆறு தமிழ் பொதுமக்களை இராணுவம் சுட்டுக் கொன்றுளளது.

## 26-05-86

புலிகளின் நிர்வாகத்திலுள்ள யாழ் நகரிற்கு ஊறு விளைவிக்கும் தீயஎண்ணத்துடன் கோட்டை இராணுவத்தினர் முகாமினுள் இருந்த வண்ணம் செல் தாக்குதலை நடாத்தினார்கள். அரச பயங்கரவாதிகளால் ஏவிவிடப்பட்ட செல்கள் மணிக்கூட்டுச் சந்தி, பிரதானவீதி ஆகிய இடங்களில் வீழ்ந்து வெடித்தன. இத்தாக்குதல்களில் கொட்டடியைச் சேர்ந்த சோமசுந்தரமும் அவரது மனைவியும் காயமடைந்துள்ளார்கள்.


புலிகளின் முற்றுகையிலிருக்கும் யாழ் கோட்டை இராணுவத்தினர், வெளியே வந்து இனப்படுகொலையை மேற்கொள்ள முடியவில்லை என்று ஆத்திரமடைந்தார்கள். இதனுல் அவர்கள் 24 05 86 காலை முகாமில் இருந்தவண்ணம் கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். அரச படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்குக் குருநகர் வாசியான நாகராஜா (28) எனும் இளைஞர் பலியானார். இவர் தனது நன்பர்களுடன் கடற்கரை சாலையில் தேனீர் அருந்தச் சென்றுகொண்டிருக்கும் போதே சுடப்பட்டார்.

வவுனியாவிலும் அரச படையினரின் அட்டகாசங்கள் அதிகரித்து வருகின்றன. இன்று காலை வவுனியா பூந்தோட்டப் பகுதியிலுள்ள மீன் வியாபாரியான மீரான் என்பவர் அரச படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமடைந்தார்.

## 31-05-86

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தம்பலகாமம் எனும் கிர்ாமத்தைச் சிங்களக் கூலிப்படையினரும், சிங்களக் காடையர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஊர்காவல் படையினரும் முற்றுகையிட்டனர். இராணுவத்தினர் அப்பாவித் தமிழ் மகன் ஒருவரைச் சுட்டுக் கொன்றுள்ளார்கள். ஊர்காவல் படையினர் தமது பங்கிற்கு 07 தமிழர்களை வரிசையாக நிறுத்தி வைத்துச் சுட்டனர். இதில் மூவர் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர், மற்றுமிருவர் தப்பிச் சென்றனர். கொல்லப்பட்ட மூவரில் இருவர் திலகரத்தினம், சௌந்தரராஜன் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இச்சம்பவத்தைத் தொடர்ந்து பீதியடைந்த தமிழ்க் குடும்பங்கள் அகதிகளாக இடம் பெயரலாயினர்.

# களத்தில் உயிர்நீத்த விடுதலைப் புலிகள்



சிவசாமி,
சிவகுமாரன்
(கேசிகன்)


தோற்றம்: 30-01-57
மறைவு: 18-05-86

புங்குடுதீவு மேற்கைச் சேர்ந்த சிவகுமாரன் (கேசிகன்) பலாலி இராணுவத்தின ருடனை நேரடி மோதலில் 18-05-86 அன்று வீர மரணமடைந்தார்.

லெப்டினன்ட்
சதாசிவம்
தமுரசுவரன்
(அர்ச்சுனன்-
குட்டியா)

தோற்றம்: 04-04-60
மறைவு: 12-06-86

மன்னரில் 12-06-86 அன்று அரச படையின ருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்.



www.tamilarangam.net



# செய்திக்கதிர்

## மயிலிட்டியில் நேரடிப்போர்! நிலைகுலைந்த இராணுவம் முகாமைநோக்கி ஓட்டம்

7.6.86 நண்பகல் காங்கேசன்துறையை சென்றடைய எண்ணிய இராணுவத்தினர் பலாலி முகாமிலிருந்து வெளியேறி மயிலிட்டி சந்தியை அடைய வந்தபோது அவர்களை இடைமறித்து புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். இந் நேரடிப் போரில் ஹெலிகப்டர் ஒன்று பாதுகாப்பாக சுட்டுக்கொண்டும், ஷெல் குண்டுகளை வீசியபடியும் பறந்து வந்தது. இதில் காங்கேசன்துறைச் சந்தியில் இரு ஷெல் குண்டுகளும் காங்கேசன்துறை யாழ் தியேட்டருக்கருகில் இரு குண்டுகளும் வீழ்ந்து வெடித்தன. ஊறணி சனசமூக முன்றலில் ஒரு குண்டும் வீழ்ந்து வெடித்தது. இவ்வனைத்தையும் எதிர்கொண்டு கடுமையாகத் தாக்கிய புலிகளுக்கு முன் நிற்கவியலாத இராணுவம் மீண்டும் பலாலி முகாமை நோக்கித் தப்பி ஓடியது.

## மீனவர்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்பு! கடற்படைக் கப்பல்கள் கண்காணிப்பு தீவிரம்!

மாதகல், சுழிபுரம், கீரிமலை கடற்பகுதிகளில் சிங்களக்கடற்படையின் ரோந்துக் கப்பல்களின் நடமாட்டம் கடந்த சில நாட்களாக தீவிரமாகியுள்ளது. மாதகல் கடற்கரையிலிருந்து சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் கடற்படைக் கப்பலொன்று நங்கூரமிட்டு நிற்கின்றது. கீரிமலைக் கடற்பகுதியிலும், காங்கேசன்துறை 'ஹாபர் வியூ ஹோட்டலுக்கு' அருகாமையிலும் இரு கப்பல்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இக் கப்பல்களைச் சுற்றி பீரங்கி பொருத்தப்பட்ட சிறிய படகுகள்' காணப்படுகின்றன. இவை அடிக்கடி நீர்ப்பரப்பினுள் சென்று கண்காணித்துத் திரும்புகின்றன. இதனால், இப்பகுதிகளில் வாழும் ஏழை மீனவர்கள் தங்களது தொழிலை மேற்கொள்ளவியலாத நிலையில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## இலங்கைத் தேயிலை - உலக நாடுகள் புறக்கணிப்பு! தேயிலை விற்பனை பெரும் வீழ்ச்சி!

இலங்கையின் தேயிலை விற்பனை பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது. போராளிகள் தேயிலையில் 'சயனைட்' கலந்துள்ளதாக விடுத்த அறிவிப்பினால் உலகநாடுகள் பல தேயிலை கொள்வனவை நிறுத்திவிட்டன. கடந்த 08.06.86 அன்று நடைபெற்ற ஏலத்தில் கிலோ 25 ரூபாவுக்குக் கூட கொள்வனவு செய்யப்பட்டது. கடந்த மூன்றரை வருடங்களில் இவ்வாறு மிக மோசமாக வீழ்ச்சியடைந்தது இதுவே முதல் முறை என வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மேலும், இலங்கைத் தேயிலையின் தரம் நாளுக்கு நாள் குறைந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## விடுதலைப் புலிகள் சாகசம்! ஊர்காவல்படையிடமிருந்து துப்பாக்கிகள், தோட்டாகளைத் தாக்கிப் பறித்தனர்.

07-06-86 அன்று மூதூர் 55ம் கட்டையில் ரோந்து வந்துகொண்டிருந்த ஊர்காவல் படையினரை தமிழீழ விடுதலைப் புலிகளின் கெரில்லா அணியொன்று மறைந்திருந்து தாக்கியது. புலிகளின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் அதிர்ச்சியுற்ற காவல் படையினர் தங்களது ஆயுதங்களைக் கைவிட்டுவிட்டு தலைதெறிக்க ஓடினர். இச் சம்பவத்தில் 12 சொட்கண் துப்பாக்கிகள், 50 தோட்டாக்கள் பெருந்தொகையான 'டி.என்.டி கிரனைட்டுகள்' முதலானவை 'ஊர்காவல் படையிடமிருந்து விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## முகாமை விட்டு வெளியே வரவியலாத இராணுவம் உள்ளிருந்தபடி 'ஷெல்' தாக்குதல்! பல கட்டிடங்கள் சேதம் - ஒருவர் கொல்லப்பட்டார்

10-6-86 அதிகாலை நான்கு மணி முதல் வல்வெட்டித்துறை, தொண்டமனாறு இராணுவ முகாம்களுக்குள் அடைபட்டுக் கிடக்கும் இராணுவத்தினர் உள்ளிருந்தபடி எவ்வித இலக்குமின்றி கண்டபடி(ஷெல்) குண்டுகளைத் தொடர்ந்து வெடித்தனர். இதனால், முகாமையொட்டியிருந்த பல கட்டிடங்கள் பலத்த சேதமடைந்தன. பலர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவரில் மரியரோஸ் அல்பிரட் (23), டி. நவரட்ணராசா (40), இவர் மனைவி நிலஅரியம்மா (35), ஆகியோர் ஆம்புலன்ஸ் மூலம் யாழ் மருத்துவ மனைக்கு கொண்டுவரப்பட்டனர். இதில் கதிர்வேலு மாஸ்டர் (65) எனும் தமிழர் கொல்லப்பட்டுள்ளார். இதனையடுத்து நண்பகல் வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து வெளியேறத் தலை நீட்டிய இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் கடுமையாகத் தாக்கினர். இதில் சில இராணுவத்தினர்கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர் என அறியப்படுகிறது,

## விடுதலைப் புலிகள் "கைவரிசை" இருளில் தவிக்கும் சிங்கள இராணுவம்!

கடந்த 8-6-86 ஞாயிறு முதல் வல்வெட்டித்துறை இராணுவ முகாம் இருட்டுக்குள் சிக்கித் தவிக்கின்றது. முகாமிற்குள் வரும் மின் இணைப்பை விடுதலைப் புலிகள் முற்றிலும் துண்டித்துவிட்ட காரணத்தால் இந்நிலையேற்பட்டுள்ளது. ஜெனரேட்டர் உதவி கொண்டு முகாமின் உள்பகுதியில் ஓரளவு மட்டும் மின்னொளி பெற்றுக்கொள்கின்றனர்.

www.tamilarangam.net



## போதைப் பொருட்கள் தடை! தமிழீழ மக்களுக்கு புலிகளின் வேண்டுகோள்!

போதைப் பொருட்களை மக்கள் பயன்படுத்தி சீரழியும் கேட்டினை ஒழிக்கு முகமாக விடுதலைப் புலிகள் தமிழீழமெங்கும் மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர். அதில், ''தமிழீழ-மக்களுக்கு! போதை வஸ்து ஓர் உயிர் கொல்லி; இதன் ஆக்கிரமிப்பிலிருந்து முற்றாக விடுபடுவோம்! போதைவஸ்து விற்பனையாளருக்கு! தமிழீழத்தில் போதைவஸ்து விற்பனையை முற்றாக நிறுத்தவும்!'' எனக் குறிப்பிட்டுள்ளது.

## தமிழர்களின் இழி நிலை போக்கப் போராடும் இளைஞர்களை நாம் மறக்க முடியாது! பண்டைய வீரம் பேசி பெருமைப்படுவதுடன் நிற்காது புதிய வரலாறு படைக்க இளைஞர்களே! புறப்படுவீர்! கல்லூரி விழாவில் கல்வியாளர் சிந்தனையுரை!

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பவளவிழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வட்டாரக்கல்வியதிகாரி எஸ். தனஞ்செயன் அவர்கள் தமதுரையில், '' பழைய சரித்திரத்தில் தமிழர்கள் செய்த வீரத்தைப் பற்றிக் கூறிப் பெருமைப்படுவதில் மட்டும் நாம் நின்றுவிடக் கூடாது. தற்போது அச்சரித்திரத்தையே மாற்றி, இனவாதத்தைக் காக்க முயலும் சில பிற்போக்கு வாதிகள் வெட்கித் தலைகுனியக் கூடியளவு நமது தமிழ் மாணவர்கள் எதிர்காலத்தில் விளங்க வேண்டும். அதற்காக நாம் நமது பழைய வரலாற்றைக் கற்கவேண்டும். அவ்வாறு கற்ற கல்வி மூலம் நமது சேவையை மக்களுக்குச் செய்ய வேண்டும். இதுவே எங்களுக்காக, எங்கள் விடுதலைக்காக உயிர்விடுபவர்களுக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும் எனக் குறிப்பிட்டார்.

இந் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வைத்திய கலாநிதி என். சரவணபவானந்தன் தமதுரையில், ''எமது தாய்மொழியான தமிழ் எமது கண்களுக்கு இணையான போதிலும் அதனைக் கொண்டு நாம் சில துறைகளில் குறிப்பாக, தொழில் நுட்பத்துறைகளில் முன்னேறுவது கடினம். எனவே மாணவர்கள் இளவயதிலிருந்து ஆங்கிலக் கல்வியைப் பயில வேண்டும். தற்போது எமது மக்களில் அனேகரின் அன்றாட வாழ்க்கை அகதி முகாம் வாழ்க்கையாகி விட்டது. அதே வேளையில் இவ்வழி நிலையை உடைத்தெறிவதற்காக மனம் தளராது உயிரை துச்சமென மதித்துப்போராடும் இளைஞர்களை நாம் மறக்க முடியாது,'' -- எனக்குறிப்பிட்டார். அடுத்து வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் தமதுரையில், '' தமிழ் மக்களாகிய நாம் எல்லாவற்றையும் இழந்தாலும் கல்வியை மட்டும் இழக்கமாட்டோமெனத் திடம் கொண்டிருந்தோம். ஆனால் சில பாடசாலைகளை நாம் இழந்துவருவதால் கல்வியும் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கிறது. எனவே, மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலை மோகத்தை விடுத்து மத்தியம் போன்ற கிராமப் பாடசாலைகளை நாட வேண்டும். ஆசிரியப்பெருமக்களும் கல்வியை விற்பனைப் பொருளாக்காமல் சேவை மனப்பான்மையுடன் பணியாற்ற வேண்டும்', எனக் குறிப்பிட்டார்.

## கொழும்பு நகரை பாதுகாக்க புதிய திட்டம் - அத்துலத் முதலி அறிவிப்பு

போராளிகளின் நடவடிக்கைகளிலிருந்து கொழும்பு நகரத்தைப் பாதுகாக்க விசேட திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதென தேசிய பாதுகாப்பமைச்சர் லலித் அத்துலத்முதலி பாராளுமன்றத்தில் கூறினார். இந்தப் பாதுகாப்பு ஒழுங்குகளை அமுல்படுத்த பொதுமக்களின் உதவி தேவை என்ற அமைச்சர், தெரிவு செய்யப்பட்ட மக்கள் குழுக்களிடம் அவர்களது பகுதியிலுள்ள நிறுவனங்கள், வீதிகள், அனைத்தினதும் பாதுகாப்பு ஒப்படைக்கப்படும் என்றார். அண்மைக் காலத்தில் கொழும்பு நகரில் இடம் பெற்ற தொடர்ச்சியான குண்டு வெடிப்பு சம்பவங்களால் சிங்களர்களை சமாதானப் படுத்தும் முயற்சியாக இவ்வறிவிப்பு காணப்படுகின்றது.

## சிங்கள அரசால் தமிழ் எழுத்தாளர்கள் தொடர்ந்து புறக்கணிப்பு சாகித்திய அகாடமி பரிசு வழங்கப்படுவதேயில்லை

தமிழ் எழுத்தாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சாகித்திய அகாடமி பரிசுகள் கடந்த நான்கைந்து ஆண்டுகளாக வழங்கப்படுவதேயில்லை. தமிழ் அமைச்சர் ஒருவர் இதற்கு பொறுப்பாக இருந்தும் இந்த நிலை ஏற்பட்டுள்ளதென்று சிங்கள அரசின் புறக்கணிப்பைச் சுட்டிக்காட்டி எழுத்தாளர் திரு. டொமினிக்ஜீவா அவர்கள் யாழ் மாவட்ட கலைக்கழக எழுத்தாளர் கூட்டத்தில் வேதனையுடன் பேசினார்.

## மலையகத் தமிழர் அடித்துக் கொலை - தலவாக் கொல்லையில் இராணுவம் தேடுதல் நடவடிக்கை

ஹட்டன், தலவாக்கொல்லைப்பகுதியின் காடுகளில் போராளிகள் மறைந்திருக்கக் கூடுமென எண்ணி இப்பகுதிகளில் ஹெலிகாப்டர்கள் மூலம் கொண்டு வந்து குவிக்கப்பட்ட இராணுவத்தினர் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். கொழும்பில் இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்குப் பின் மலையக நகரங்களில் போலீஸ், இராணுவ கண்காணிப்பு பலமாக்கப்பட்டதுடன் தலவாக்கொல்லைப்பகுதியில் (மலையகம்) இராணுவ முகாம் ஒன்றும் அமைக்கப்பட்டது. இதே வேளையில் தேயிலைத் தோட்டமொன்றில் டீமேக்கராகப்பணிபுரிந்த தமிழர் ஒருவர் இராணுவத்தால் அடித்துக்கொல்லப்பட்டுள்ளார். இச்சூழலில் மலையகத் தமிழ் மக்கள் மிகுந்த அச்சத்துடனும் பதட்டத்துடனும் இருந்து வருகின்றனர்.

## சிங்கள இளைஞர்களுக்கு இராணுவப்பயிற்சி ! தமிழ் இன ஒழிப்பு நடவடிக்கை தீவிரம் !!

திருமலை மாவட்டத்திலுள்ள மகாதிவுல்வேவாவைச் சேர்ந்த இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. மொறவெவ அரசாங்க அதிபர் யூ. பி. விஜயசுந்தராவின் சிபார்சின்பேரில் இப்பகுதியிலுள்ள இளைஞர்கள் கிராமப்பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் தேவையான துப்பாக்கிகளும், வெடிமருந்துகளும் சிங்கள அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



[2ம் பக்கத் தொடர்ச்சி]

கரடிப்போக்கு என்னுமிடத்தில் புலிகளின் மற்றுமொரு கெரில்லா அலுயானது அரச படையினரை எதிர்கொண்டது. காட்டுப்புறத்திலிருந்து திடீரென எமது கெரில்லா அணியானது நிகழ்த்திய பதிலடித் தாக்குதலால் அரச படையினர் பலத்த சேயுத்துக்குள்ளானரகள். ஆறு சிங்களப் படையிரை இழந்த சிறிலங்கா இராணுவம் புலிகளின் தாக்குதலிற்கு முன்னிற்கமுடியாது புறமுதுகு காட்டி ஓடியது பகைவருடன் இடம்பெற்ற வீரப்போரில் சசி எனும் வீர இளைஞன் புலிகளின் தரப்பில் வீரமரணமடைந்தான்.

## ஐந்தாவது நாள்

ஐந்தாவது நாளாக (8-6-86) நடந்த சண்டையில் முறிகண்டி, தர்மபுரம் முரசுமோட்டை, உருத்திரபுரம், கனகபுரம் ஆகிய பகுதிகளில் குண்டுவீச்சு விமானங்கள் இடைவிடாது, மக்கள் வாழும் பகுதிகளில் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதல்களில் 25க்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட வேளையில் முகாமை விட்டு வெளியே வந்த இராணுவத்தினர் மீது எமது வீரர்கள் நவீன ரக ஆயுதங்களைக் கொண்டு நடத்திய தாக்குதலில் இராணுவத்தின் தரப்பில் பலத்த சேதமேற்பட்டது. கிளிநொச்சி நகரப் பகுதியிலிருந்து கிளிநொச்சி இராணுவ போலீஸ் கூட்டு முகாமுக்குச் சென்ற மின்விநியோகத்தை எமது வீரர்கள் துண்டித்தார்கள். கரடிப்போக்கு சந்திக்கு அண்மையில் இராணுவத்தினரை எதிர்த்து எமது வீரர்கள் நடத்திய தாக்குதலில் எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

ஐந்து நாள் மோதலுக்குப்பின் திங்கட்கிழமை 9-6-86 அன்று வழமைக்கு திரும்பியிருந்த கிளிநொச்சி நகரம் வட்டக்கச்சியில் 11ந் தேதி இராணுவம் நுழைந்ததைத் தொடர்ந்து மீண்டும் அமைதியிழந்தது. வட்டக்கச்சியில் அகதிகளாக தங்கியிருப்போருக்கு உணவு வழங்குவதைத்தடுக்கும் முயற்சியில் இறங்கிய சிங்கள இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மீண்டும் பெரும் சண்டை மூண்டது. இச் சண்டையில் சிங்கள இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மூன்று பேர் படுகாயமுற்றனர். இராணுவத்திற்கு ஆதரவாகக்குண்டுவீச்சு விமானங்களும் ஹெலிகப்டர்களும் மக்கள் வாழும் பகுதிகளில் குண்டுமாரி பொழிந்தவண்ணமிருந்தன. திருவையாறு, இரணைமடுக்குளம் ஆகிய பாதைகளினூடாக இராணுவத்தினர் வந்ததைத் தொடர்ந்து எமது வீரர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற சண்டையில் மூன்று இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் பலர் படுகாயமுற்றனர்.

11-6-86 அன்று கிளிநொச்சி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் மோட்டார் செல்களைப் பயன்படுத்தி மேற்கொண்ட தாக்குதலில் இராணுவ முகாமுக்கும் இராணுவத்திற்கும் பலத்த சேதமேற்பட்டது. தினசரி சிறிதும் பெரிதுமாக மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

16-6-86 அன்று சிங்கள இராணுவத்திற்கு வெளி உதவி கிடைக்கும் வாய்ப்பைத் தடுத்து நிறுத்துமுகமாக உருத்திரபுரம் பாலத்தை விடுதலைப்புலிகள் வெடி வைத்துத் தகர்த்தனர்.

18-6-86 அன்று கொக்காவில் இராணுவ முகாமிலிருந்து கிளிநொச்சி இராணுவத்தினரிற்கு உதவும் நோக்கோடு புறப்பட்டு வந்த சுமார் 100இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் இடைமறித்துத் தாக்கியதில் இராணுவத்தினர் பின் வாங்கி தம் இருப்பிடத்திற்குத் திரும்பினர்.

19-6-86 அன்று முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து புறப்பட்டு வந்த இராணுவத்தினரிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் புதுக்குடியிருப்பு எனும் இடத்தில் இடம் பெற்ற தாக்குதலின் பின் இராணுவத்தினர் பலத்த சேதத்துடன் பின் வாங்கிச் சென்றனர்.

அதே வேளை கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து 150 இராணுவத்தினர் மூன்று கவச வண்டிகள் சகிதம் புறப்பட்டுவந்தபோது விடுதலைப்புலிகள் திருநகர், ஜெயந்தி நகர் ஆகிய இடங்களில் வழிமறித்துத் தாக்கியதில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் மேலும் 7 பேர் படுகாயமடைந்தனர். அத்துடன் கவசவாகனமொன்றை முற்றாகச் சேதமாக்கி விடுதலைப் புலிகள் இராணுவத்தினரிடமிருந்து பல ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

---

**BOOK POST**
**PRINTED MATTER**

"உறுமல்"
த. பெ. எண்: 928
அடையாறு
சென்னை 20

LTTE (UK Branch)
B.M. BOX 5973
LONDON WC1 3XX

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்